# வகுப்பறையும் விளையாட்டும்

வகுப்பு: 1

நான் முதலாம் வகுப்பு குழந்தைகளுடன் கற்றலில் ஈடுபட்டு வருகின்றேன். முதல் நான்கு வாரம் பாடம் மற்றும் புத்தகத்தைக் கண்டு கொள்ளவே இல்லை என்றே கூறலாம். பிஞ்சு கைகள், மழலைப்பேச்சு, அழகான குறும்புகள், அதிகமான அட்டகாசங்கள், அளவுக்கு மீறிய பாசம் (என்மேல்) மற்றும் பல இவர்களைப் புத்தகம் மற்றும் வகுப்பறை என்ற கட்டுப்பாட்டுக்குள் வைக்க விடாமல் என்னைத் தடுத்தன. மற்ற ஆசிரியர்கள் என் வகுப்பிற்குள் வந்து, “என்ன ஒரு mini stationary கடையே இங்கு தான் உள்ளது!” என்று கூறிச் செல்வார்கள். பழைய செய்தித்தாள்கள், கொட்டாங்குச்சி, கல், களிமண், வேண்டாத பொருட்கள் எல்லாம் வகுப்பிற்குள் இருக்க, செயல்பாடுகள் வெளியே நடக்கும்.

மாணவர்கள் தயக்கமின்றித் தங்கள் கருத்தைக்கூற, பாடப்புத்தகத்தை அலமாரியில் வைத்து பூட்டினேன். பொம்மலாட்டம், வண்ண வண்ண கோலங்கள், குச்சி விளையாட்டு, கல் பொருக்குதல், மைன்ட் கேம், கோதுமை மாவில் உருவம் செய்தல், களிமண் விளையாட்டு, நாடகம் - குழு செயல்பாடு, பாடல் விளையாட்டு. இதுபோன்ற செயல்களில் விளையாட்டுகளில் ஈடுபட்டு என் குழந்தைகளின் மனதினைத் திருடி விட்டேன்.



களிமண்ணில் என் குழந்தைகளின் கைவண்ணம்

நான்கு வாரம் கழித்துப் புத்தகத்தைத் திறந்து கணக்கு பாடத்தில் உள்ளே மற்றும் வெளியே நடத்தினேன். இதற்கு நானும் என் குழந்தைகளும் முதல் நான்கு வாரமாகச் செய்து வந்த ஒரு விளையாட்டு எங்களுக்குத் துணையாக இருந்தது. நான் மறந்து விட்டேன். ஆனால், மாணவர்கள் கூறினர். அவ்வாறே குளம்-கரை விளையாட்டை விளையாடினோம். மிகவும் சந்தோஷமான தருணம் அது.

நாம் சாதாரணமாக நினைக்கும் விளையாட்டுகள் குழந்தைகளுக்கு,

ஒரு புதிய சக்தியையும் உத்வேகத்தையும் தருகின்றனஅவர்கள் சுதந்திரமாகப் பேசுவதற்கு நிறைய வாய்ப்பளிக்கின்றன, ஆசிரியர் மீதும் பள்ளியின் மீதும் ஒரு நம்பிக்கையை வளர்க்கின்றன, ஆசிரியர் மாணவர்களிடையே ஒரு நெருக்கமான உறவை உண்டாக்குகின்றன, அவர்களின் அபரீதமான சக்தியை பயனுள்ள முறையில் செலவழிக்க வழிவகுக்கின்றன, அனைத்திற்கும் மேலாக உடலையும் மனதையும் வலிமையாக்குகின்றன.

இதனால் நானும் என் குழந்தைகளுடன் சேர்ந்து எனது வகுப்பறையை அனுபவித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றேன், ஒரு ஆசிரியராக அல்ல, மாணவியாக.



கற்றல் வெளிப்பாடு பொம்மலாட்டம் வாயிலாக



**த. ஜெஜலட்சுமி,**
தொபஆ, அ.தொ.ப, கரிக்கலாம்பாக்கம்